தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்






India

கிறிஸ்துவின் வசனம்
உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
**B. அர்ஜுனன்**

**மரம் 13 அக்டோபர் 2013 கனி 11**


R.N.I.No.TNTAM/2000/3629 Postal
Registration No.DDL/19/2012-2014
Posted at Batlagundu Post office
on 10 th Oct. 2013

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.



**BATLAGUNDU CHURCH OF CHRIST**
*MEETS HERE*
**17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,**
**DINDIGUL DISTRICT, S.INDIA.**
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: arjunanglory@gmail.com
**Website: www.thewordofchristindia.com**


To

சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள் 1பேது.2:25


*Our Postal Address:*
**THE WORD OF CHRIST**
**POST BOX No. 5**
**BATLAGUNDU - 624202**
**S.INDIA**





***Our Radio & TV Programs***
**SriLanka Radio SW 25,41 Meter**
**on Saturday 5.30P.M &**
**Tamilan TV**
**on Monday 6.00 A.M &**
**Saturday 6.15 P.M**



# World Evangelism Gospel Media



## Arjunan in Tamil on Tamilan TV & Radio:

TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(TAMILNADU Contact Mobile: 9443558041)*

## Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV:

TV:Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 a.m **on Rakshana TV:** *(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

## P.R.Swamy & Douglas in Tamil on Radio:

Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

## P.K.Varghese in Malayalam on Hindi TV:

TV:Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel. *(KERALA Contact Mobile: 9447035465)*

## Philemon & Kingsley in Tamil on Tamilan TV:

TV:Every Tuesday 9.30-9.45 p.m and Every Sunday 6.45-7.00 a.m. *(TAMILNADU Contact Mobile: 9244214421)*

## Rajanayagam in Tamil on Tamilan TV:

TV:Every Monday 7.00-7.15 a.m and Thursday 9.30-10.00 p.m and Saturday 7.15-7.30 p.m. *(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

## Sunny, Francis & Vinay David in Hindi on Hindi TV:

TV:Every Tuesday 7.00-7.30 on Shubh Sandesh Hindi Channel. *(NEW DELHI Contact Mobile: 09810896789)*

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 158

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. யூதாவின் குமாரரையும் எருசலேமின் குமாரரையும் அவர்களுடைய எல்லைகளுக்குத் தூரமாக்கும்படிக்கு, எவர்களிடத்தில் விற்றுப்போட்டதாக கர்த்தர் சொன்னார்?
2. மற்றப் புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல நீங்கள் இனி நடவாமலிருங்கள் என்று எச்சரிக்கை செய்யும் அப்போஸ்தலன் யார்?
3. நீ யூதாதேசத்துக்கு ஓடிப்போ, அங்கே அப்பம்தின்று, அங்கே தீர்க்கதரிசனம் சொல்லு என்று யார் யாரைப் பார்த்து சொன்னான்?
4. நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து, உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடேகூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் யாருக்குத் தெரியப்படுத்த வேண்டும்?
5. இதோ, கர்த்தராகிய ஆண்டவரின் கண்கள் பாவமுள்ள ராஜ்யத்துக்கு விரோதமாக என்னசெய்யப்பட்டிருக்கிறது?
6. உங்கள் ஒழுங்கையும், கிறிஸ்து இயேசுவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்தின் உறதியையும் பார்த்துச் சந்தோஷப்படுகிறேன் என்று பவுல் எந்தசபைக்கு கடிதம் எழுதினார்?
7. ஏசாவின் பர்வதத்தை நியாயந்தீர்ப்பதற்காக இரட்சகர்கள் சீயோன் பர்வதத்தில் வந்தேறுவார்கள்; அப்பொழுது ராஜ்யம் எவருடையதாயிருக்கும்?
8. நாங்கள் ஒருக்காலும் இச்சகமான வசனங்களை சொல்லவுமில்லை, பொருளாசையுள்ளவர்களாய் மாயம்பண்ணவுமில்லை; எவரே சாட்சி என பவுல் எழுதுகிறார்?
9. கர்த்தர் எதற்குக் கட்டளையிட்டார் அது எந்த தீர்க்கதரிசியை கரையிலே கக்கிவிட்டது?
10. ஒழுங்கில்லாதவர்களுக்கு புத்திசொல்லவேண்டும், திடனற்றவர்களைத் தேற்றவேண்டும், பலவீனரைத்தாங்கவேண்டும், எல்லாரிடத்திலும் எப்படியிருக்கவேண்டும்?

- அகாஸ்வேரு அரசாண்ட நாட்களில் 127 நாடுகளில் இந்தியாவும் ஒன்று - எஸ்தர்1:1.
- மற்ற நாடுகளோடு வர்த்தக தொடர்பு, சாலமோன் நாட்களில் இருந்தது - 1இரா.10:11; எசே.27:15-36.
- சிந்து நதிபாயும் துணைக்கண்டத்தின் வடமேற்குப் பகுதியில் பாகிஸ்தான் மற்றும் இந்தியா ஒரு பெரிய பிரதேசமாக இருந்தது.
- செல்யூகஸ் நிக்கேடார் வசம் இருந்த அலெக்சாண்டரால் வென்ற பகுதிகள் சந்திரகுப்த மௌரியருக்கு 305-ல் கொடுக்கப்பட்டது.
- எஸ்தர் காலந்தொடங்கி இந்தியாவிலும் யூதர்கள் இருந்திருக்கிறார்கள் - எஸ்.9:30,31






சிறுவர் பகுதி

# இரண்டுவிசை தரிசனம்

வேத பகுதி: 1இராஜாக்கள் 11:9



**அ**ன்பான தம்பி தங்கைகளே சாலொமோன் ராஜாவை நீங்கள் கேள்விப்பட்டு இருக்கிறீர்களா? அவர்தான் எருசலேமின் தேவாலயத்தைக் கட்டினார். அவர் இந்த ஆலயத்தை 7 வருஷத்தில் கட்டிமுடித்தார். அவர் எருசலேமிலே இஸ்ரவேலையெல்லாம் 40 வருஷம் அரசாண்டார். 13 வருஷத்தில் அரண்மனையையும் கட்டிமுடித்தார். 3000 நீதிமொழிகளையும், 1005 பாட்டுகளையும் எழுதினார். அவருக்கு பிரபுக்கள் குலமான எழுநூறு மனையாட்டிகளும், முந்நூறு மறுமனையாட்டிகளும் இருந்தார்கள்.

ஆனால், சாலொமோன் வயது சென்றபோது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்; அதினால் அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை. சாலொமோன் சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், அம்மோனியரின் அருவருப்பாகிய மில்கோமையும் பின்பற்றினான். சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதைப்போல கர்த்தரைப் பூரணமாய்ப் பின்பற்றாமல், கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

ஆகையால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சாலொமோனுக்கு இரண்டுவிசை தரிசனமாகி, அந்நியதேவர்களைப் பின்பற்றவேண்டாம் என்று கட்டளையிட்டிருந்தும் அவன் கர்த்தரை விட்டுத் தன் இருதயத்தைத் திருப்பி, அவர் கற்பித்ததைக் கைக்கொள்ளாமற்போனதினால், கர்த்தர் அவன்மேல் கோபமானார். அன்பான பிள்ளைகளே, இந்த சாலொமோனை கர்த்தர் இப்படி எச்சரித்திருந்தும் வழிவிலகிபோனான். இவனுக்கு அதிகமான ஞானத்தைக் கொடுத்து, அத்தோடு செல்வத்தையும் கொடுத்திருந்தார். இவனோ ஒன்றுக்கும் உதவாத விக்கிரகத்தை பின் பற்றி சோரம்போனான். நீங்களும் இவனைப்போல போய்விடாதபடி கர்த்தருக்குள் உங்களை பாது காத்துக்கொள்ளுங்கள்.

**மனப்பாட வசனம்**

“என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்”

(யாத்திராகமம் 20:3)



திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 13 அக்டோபர்-2013 கனி - 11

ஆசிரியருரை

# ஒரு கள்வனின் அறிக்கை
## Confess of a Thief



சிலுவையில் இயேசுவின் வலது புறத்தில் ஒரு கள்வனும் இடது புறத்தில் ஒரு களவனுமாகிய இரண்டு கள்வர்களை அறைந்தார்கள். அதில் ஒருவன் ஆண்டவர் இயேசுவை நோக்கி: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான். தம்மோடு கூட அறையப்பட்ட ஆண்டவர் இயேசுவை அறிந்திருந்தபோதும் அவருக்குப் பயப்படாமல், நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று சொல்லி அவரை இகழ்ந்திருக்கிறான். ஆனால் “மற்றவன் அவனை நோக்கி: நீ இந்த ஆக்கினைக்குட்டபட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா?” என்றான் (லூக்.23:40). குற்றம் செய்து அறைப்பட்டிருக்கிறார்கள் ஆனால் ஆண்டவர் இயேசு ஒரு குற்றமும் செய்யாமல் கள்வர்களோடு ஒரு கள்வனைப்போல சிலுவையில் அறையப்பட்டிருக்கிறார் என்பதை நினைத்த மற்றவன் அவனுக்குப் போதனை செய்வதை சற்று கவனியுங்கள். சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கிறான் என்றால் அவனுக்கு எத்தனை வேதனையிருந்திருக்கும்! ஒவ்வொரு நிமிடமும் மரணத்தை நோக்கி அவனுடைய ஜீவன் போய்கொண்டிருக்கும் அந்த வேளையிலும் அவன் மற்ற கள்வனை நோக்கி நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனை விசுவாசிக்கிறதில்லையா என்றான், அவன் முன்னமே இயேசுவை விசுவாசித்திருக்கிறான் என்பது இதிலிருந்து நமக்கு தெரிய வருகிறது. மற்றவன் இயேசுவை விசுவாசிக்காதவனாகவே இருந்து சிலுவையில் அறையப்பட்டிருக்கிறான் என்பதும் நமக்குப் புரிகிறது.

தேவனுடைய இரக்கத்தைப் பற்றி நாம் சங்கீத புஸ்தகத்தில் வாசிக்கிறோம். என்னவென்றால்; “பூமிக்கு வானம் எவ்வளவு

உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரியதாயிருக்கிறது'' (சங்.103:11). அந்தப்படியாக நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா என்று சொன்ன அந்த கள்வனுக்கு கர்த்தர் இரங்கினார். அவனோ குற்றம் செய்து அறையப்பட்டவன். ஆனாலும் அவனுடைய குற்றத்தை கர்த்தர் மன்னித்து ஏற்றுக்கொண்டார். சங்கீதத்தில் நாம் படித்தபடி அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபை அவ்வளவு பெரியதாயிருக்கிறது. அது யாராக இருந்தாலும் எப்பேர்பட்ட பாவியாக இருந்தாலும் முதலாவது அவர்களுக்குள் கர்த்தருக்குப் பயப்படும் பயம் இருக்கும்போது கர்த்தர் அவர்களுக்கு இரங்குகிறார். அதுவும் பூமிக்கும் வானத்திற்கும் உள்ள தூரத்தைப்போல அவருடைய கிருபை இருக்கிறது.

சிலுவையில் தொங்கிய கள்வன் அத்தோடு நிறுத்திவிடவில்லை; மேலும் அவனை நோக்கி: ''நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டான்'' (லூக்.23:41). கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளும் காது ஞானமுள்ளது என்று நீதிமொழிகள் புத்தகத்தில் படிக்கிறோம். அந்தப்படியாக இவன் அவனை நோக்கி கடிந்துகொண்டு போதிக்க ஆரம்பித்தான். நாமாக இருந்தால் இந்த அளவு பாடுபட்டுக்கொண்டு போதித்திருப்போமா என்று எண்ணிப்பாருங்கள். இந்த கள்வன் சலித்துப்போகாமல், தன்னுடைய வீட்டைப் பற்றியோ அல்லது உறவினர்களைப் பற்றியோ கவலைப்படாமல் சிலுவையில் தொங்கிய மற்ற கள்வனின் வார்த்தையை கேட்டு அதை ஏற்றுக்கொள்ள முடியாமல், நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம். ஆண்டவர் இயேசு என்ன குற்றம் செய்தார் என்று அவனை நோக்கி கேட்க ஆரம்பித்தான். இதிலிருந்தே தெரிகிறது இவன் தேவனுடைய ராஜ்யத்திற்கு தூரமானவன் அல்லவென்று. விசுவாசம் சிலருடைய வார்த்தையிலிருந்தே வெளிப்படும். அதைப்போல சிலுவையில் தொங்கிய கள்வர்களில் ஒருவனுடைய விசுவாசம் வெளிப்பட ஆரம்பித்தது. இவர்கள் இருவரும்பேசுகிறதை இயேசுவானவர் கேட்டுக்கொண்டிருந்தார். யோபு புஸ்தகத்தில் படிக்கிறோம்; ''சர்வவல்லவரோடே வழக்காடி அவருக்குப் புத்தி படிப்பிக்கிறவன் யார்? தேவன்பேரில் குற்றம் பிடிக்கிறவன் இவைகளுக்கு உத்தரவு சொல்லக்கடவன்'' (யோபு 40:2). இவ்வசனத்தை அறியாத அநேகர் தேவன் பேரில் குற்றம் சொல்லிக்கொண்டிருக்கவும், வழக்காடவும் செய்கிறார்கள். அன்பு வாசகரே, தேவனோடே வழக்காடி அவருக்குப் புத்தி படிப்பிக்கிறவன் ஒருவனும் இல்லை. ஆகையால் யோபுவைப்போல நான் நீசன்; நான் உமக்கு என்ன மறுஉத்தரவு சொல்லுவேன்; என் கையினால் என் வாயைப் பொத்திக்கொள்ளுகிறேன் என்று சொல்லி, அமைதலோடு மாணவர்கள் பள்ளியில் கற்றுக்கொள்வதைப்போல



1. அத்தேனே பட்டணத்து தத்துவ ஞானிகள் ஒரு தீர்மானம் செய்யும்படி வற்புறுத்தப்பட்டார்கள். சில தந்திரமாக பதிலளித்தார்கள். தத்துவம் ஒன்றும் போதாதென்று.

2. சென், புத்தமதம், மருந்துகள் ஒரு நிலையிலிருந்து வேறொரு நிலைக்கு செல்லக்கூடிய தியானம். ஒன்றை எதிர்பார்த்து செயல்படும் கொள்கை அல்லது மாறுபட்ட வாழ்க்கை முறை போன்றவைகளைப் போல கிறிஸ்தவமும் மற்றொரு வாழ்க்கைத் தத்துவமல்ல.

3. இயேசு எழுப்பப்பட்டது உண்மையானால் அதைக்குறித்து ஒரு தீர்மானம் நமக்கு வேண்டும். கிறிஸ்துவை நாம் கட்டாயம் ஏற்றுக் கொண்டு அவரைப் பின்பற்ற வேண்டும். அவர் உயிருடன் எழுப்பப்படாவிட்டால் அதற்கும் ஒரு தீர்மானத்தை நாம் செய்யவேண்டும். ஆனால் இப்போது எந்த நிலையிலும் அதை தவிர்க்க வேண்டும். எந்த மதிப்பும் மற்ற ஒன்று அது, ஏமாற்று பொய் இதைத் தவிர வேறல்ல. இந்த மார்க்கம் மட்டுமே உயிர்த் தெழுதலை அடிப்படையாகக் கொண்டது.

ஆ) உயர்த் தெழுதலில்லாமல் கிறிஸ்தவ மார்க்கமில்லை. மற்ற எல்லா மதகுருக்களினின்றும் உயிர்த்தெழுதல் கிறிஸ்துவை வேறுபடுத்துகிறது.

1. சாக்கரட்டீஸ், காந்தி, கன்பியூசியஸ் அல்லது சில யூத போதர்களைப் போல கிறிஸ்துவும் ஒரு மாபெரும் மதபோதகராக அறியப்பட்டிருப்பார். ஆனால் இரட்சகராக அல்ல.

2. (1கொரி.15:14) எங்கள் விசுவாசம் விருதாவாயிருக்கும் (வெறுமை, ஒன்றுமில்லா நிலை) அதைக் குறித்து ஒன்று உபயோகமில்லை.

3. எங்கள் பிரசங்கம் பயனற்றதாயிருக்கும். அப்போஸ்தலர்களுடைய பிரசங்கங்கள் ஒரு கட்டுக் கதையைவிட மேலானதல்லாததாக இருந்திருக்கும்.

4. அப்போஸ்தலரும் கிறிஸ்துவும் தேவனுக்கு பொய் சாட்சிகளாக (பொய்யர்களாக) இருப்பார்கள். ஏனென்றால் உயிர்த்தெழுதல் உண்மையென்று அவர்கள் சத்தியம் செய்கிறார்கள் (அப்.2:32).

5. கிறிஸ்தவர்கள் இன்னும் தங்கள் பாவத்திலே இருக்கிறார்கள் (1கொ.15:17).

இ) சரித்திர பூர்வமான உண்மைகளில்லாமல் கிறிஸ்துவிலுள்ள விசுவாசம் பயனற்றதாகும். என்னுடைய விசுவாசத்தினாலே நான் இரட்சிக்கப்படவில்லை. அதன் பொருள் என்னவென்றால் விசுவாசம் மட்டுமே இரட்சிக்க முடியாதென்பதாகும்.

1. சான்றாக - தேவன் பேரில் தங்களுக்குள்ள விசுவாசத்தின் அடிப்படையில் தேவன் சுகமளிப்பார் என்று சிலர் மருத்துவ சிகிச்சை பெறாமலிருப்பர். ஆனாலும் யாவரும் மரிக்கின்றனர்.

2. சான்றாக - நான் சாலையின் நடுவில் நின்றால் ஒரு மகிழுந்து (கார்) என்னை மோதிவிடும் நான் பாதிக்கப்பட மாட்டேன் என்று நான் உண்மையாய் நம்பினாலும், நான் அடிபட்டு அநேகமாக கொல்லப்படுவேன் என்பது நமக்குத் தெரியும்.

3. என் முழு ஆவி ஆத்துமா சரீரத்துடன் இயேசு என் பாவங்களுக்காக மரித்து மறுபடியும் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசித்தும் அது சம்பவிக்காவிட்டால் இந்த உலகத்திலுள்ள அனைத்து நம்பிக்கைகளும் இதை நடப்பிக்க முடியாது. கிறிஸ்து எனக்குச் செய்தது என் இரட்சிப்பின் வல்லமை, அவர் செய்திருப்பார் என்பதிலுள்ள என் விசுவாசமல்ல.

அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக் கொடுக்கப்பட்டும் நாம் நீதிமான்காளக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்.

4. விசுவாசமில்லாமல் என்னை இரட்சிக்கிறது என்ற உண்மையைப் போல, சரித்திரப் பூர்வமான அடிப்படையில்லாத என் விசுவாசமும் பயனற்றது.

**- இதன் தொடர்ச்சியை அடுத்த இதழில் படியுங்கள்**

இதுவா உண்மை?

அ. ஒரு வகையில் சிந்தித்தால் இது உண்மை. நான் இயேசுவின் உயிர்தெழுதலில் நம்பிக்கை வைக்காவிட்டால், அப்போது அவர் உயிர்த்தெழுந்திருந்தாலும் அது என் வாழ்கையை ஒன்றும் பாதிக்காது.

ஆ. மாறாக, என்னுடைய விசுவாசம் ஒன்றும் பொய்யை மெய்யாக்காது. அது உண்மையாயிராவிட்டால் நான் இழப்பது என்ன?

இயேசுவானவரின் உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம் என்ன?

I). இது முக்கியமானது ஏனென்றால் முடிவில் தேவனே வெற்றிபெறுவார் என்பதற்கு இது அடிப்படை சாட்சி

அ) பல சமயங்களில் தேவன் வெற்றி பெறுகிறார் என்பது தெரிவதில்லை.

1. பூமியிலே பொல்லாங்கு கட்டுக்கடங்காமல் இருக்கிறது பாவம், வன்முறை, வறுமை, பாடுகள், யுத்தம், மரணம், இன்னும் பல. தேவன் எங்கே?

2. நாம் சபையைப் பார்க்கிறோம். 1. கிறிஸ்தவத்தைப் பார்க்கிறோம். நீதி எப்படியெல்லாம் கேலிப்பேச்சுக்கு ஆளாகிறது. தவறான உபதேசங்களும், மார்க்கங்களும் போதிக்கப்பட்டு பரவலாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன அப்படியென்றால் கர்த்தருக்கு ஊழியம் செய்வதெல்லாம் தங்கள் விருப்பப்படி வாழ்வதிலே அதிக ஆர்வத்துடன் செயல்படும் போதகமாகும். மேலும் நாம் அதிசயிக்கிறோம் - என்ன பயன்?

3. இது விசேஷமாக சீடர்களுக்குப் பொருந்தும். மேசியா மரித்துப்போனார். அவர்கள் நம்பிக்கையெல்லாம் செத்துப்போயிற்று.

4. எம்மா ஊரிலிருந்து வந்த இரண்டு பேரின் மாதிரியைப் பாருங்கள் (லூக்கா 24:13-35) இது ஏதோ தவறாய் நடந்துவிட்ட ஒரு திட்டத்தை திரும்பவும் சொல்லுவது போல் இருக்கிறது.வசனம் 21.அவர்கள் நம்பினார்கள், அவர்கள் நடப்பதாக கற்பனை செய்தார்கள் தலை குனிந்தவர்களாய்,அவர்கள் இழுந்துவிட்டார்கள் வேத வசனத்திலிருந்து கிறிஸ்து அவர்களுக்கு நிகழ்வுகளைப் பார்ப்பதற்கு வித்தியாசமான பார்வை வேண்டுமென்றார்.

5. கிறிஸ்துவின் மரணம் மற்றும் அவைகள் உயிர்த்தெழுதல் அவசியமானது, தேவனுடைய திட்டத்தில் ஒரு பகுதி. ஒரு நாள் அவருடைய வெற்றி அனைவருக்கும் வெளிப்படையாகத் தெரியும்.

ஆ) தேவன் வெற்றி பெறுவார் என்பதை பல தோற்றங்களின் மத்தியில் உயிர்த்தெழுதல் நிருபிக்கிறது.

1. ஒரு நாள் தேவனுக்கு விரோதமான எல்லாப் பகைவர்களும் மரணம் உட்பட, வெல்லப்படுவர். மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை என்றும் மரணம் இனி ஒருபோதும் அவரை ஆண்டு கொள்வதில்லை என்றும் அறிந்திருக்கிறோம் (ரோம.6:9)

2. நமக்குப் புரியாத சமபவங்கள் நிகழ்கின்றன. ஆனால் எப்படியும் தேவன் தோல்வியினின்று வெற்றி பெறுவார் என்பதை உயிர்த்தெழுதல் நிருபிக்கிறது.

3. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக (1பேது.1:3).

II) இது மிகவும் முக்கியமானது ஏனென்றால் உயிர்த்தெழுதல் இயேசுவே கர்த்தரென்று நிருபிக்கிறது ....பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார் (ரோம.1:5).

அ). அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார். இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்.

மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினார் என்றார் (அப்.17:30,31).



தேவனுடைய வசனங்களைக் கற்றுக்கொண்டு, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தில் வளர்ச்சியடைய வேண்டும். பிதாவாகிய தேவன் 2கொரி.5:21-ம் வசனத்தின்படி "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார்". அவர் பாவம் செய்யவில்லை அவருடைய வாயில் வஞ்சனை காணப்படவும் இல்லை. ஆனாலும் அவரை குற்றவாளிகளில் ஒரு குற்றவாளியைப்போல சிலுவையில் அறைந்து அவரைக் கொன்றார்கள். இதை தேவன் ஏன் அனுமதித்தார் என்று நீங்கள் நினைக்கலாம். ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகரை நீதிமான்களாக மாற்றும்படியாக தேவன் தம்முடைய அநாதி தீர்மானத்தின்படி அவரை பாடுகளுக்கு உட்படுத்தினார். ஆகையினால் ஆண்டவரும் ஜெபிக்கும்போது பிதாவே என்னுடைய சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று சொன்னார்.

மேலும் சிலுவையில் தொங்கிய அந்த கள்வன்; இயேசுவை நோக்கி: "ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்" (லூக்.23:42). பலருடைய கடைசி ஆசை என்னவாக இருக்கும். அடுத்த ஜென்மத்திலாவது நான் பணக்காரனாக பிறக்கவேண்டும் அல்லது என்னை சிலுவையில் அறைந்தவர்களை நான் அறையவேண்டும் அல்லது என்னுடைய குடும்பமாவது காப்பாற்றபடவேண்டும். இப்படி பல ஆசைகளை கேட்பார்கள். ஆனால் இந்த கள்வனின் ஆசை இயேசுவின் ராஜ்யத்தைக்குறித்து அவன் கேள்விப்பட்டபடியால் நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். ஆண்டவர் இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு தம்முடைய ஊழியத்தின் நாட்களில் போதித்தபோது; "அன்றியும் அவர் அவர்களை நோக்கி: இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மாற்.9:1). இந்த போதகத்தைக் குறித்து அவன் கேள்விப்பட்டிருக்கவேண்டும் அல்லது அவன் ஆண்டவர் போதித்த இடத்தில் இருந்திருக்கவேண்டும். ஆகையால் அவன் ராஜ்யத்தில் வரும்போது அடியோனை நினைத்தருளும் என்றான். அவனுடைய வேண்டுதல் கர்த்தருடைய சமுகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கேளுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும் என்று சொன்ன கர்த்தர் அவனுடைய வேண்டுதலைக் கேட்டு, கர்த்தர் உடனே அவனுக்கு மறுமொழியாக "இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்" எத்தனை ஆசீர்வாதமான வார்த்தை என்று பார்த்தீர்களா? அந்த கள்வனுக்கு கிடைக்கப்பெற்ற மாபெரும் பாக்கியம் அல்லவா! அந்த பாக்கியத்திற்கு அவன் தகுதியுள்ளவனாயிருந்தான்.

இன்று நீங்களும் நானும் இந்தவிதமான பாக்கியத்திற்கு

தகுதியுள்ளவர்களாக மாற நம்முடைய சூழ்நிலைகளையும், சந்தர்ப்பங்களையும் பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது. சமயம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் கர்த்தருடைய வார்த்தையை எடுத்துச்சொல்வதில் தயக்கமின்றி சொல்லவேண்டும். மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவர்களை நானும் பரலோகத்தில் இருக்கிற பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். ஆகையால் இந்த கள்வனைப்போல அறிக்கையிடுங்கள். கணக்கில்லா ஆசீர்வாதங்களை கர்த்தருடைய சமுகத்தில் பெற்றுக்கொள்வீர்கள். பவுல் சொல்லுகிறார்: “என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்” (ரோ.10:9,10). ஒரு முறை பிசாசு அண்டவரை நோக்கி: நீ தேவனுடைய குமாரனேயானால் இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்று கேட்டதைப்போல, அந்தக் கள்வன் நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள்ளும் என்று அவரை இகழ்ந்தான். நடந்தது என்ன? இயேசுவைக் குறித்து அறிக்கையிட்டவன் இரட்சிக்கப்பட்டான். அவரை இகழ்ந்தவன் கைவிடப்பட்டான்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற அன்பு வாசகரே, நீங்கள் உங்களுடைய அறிக்கையை உறுதியாக பற்றிக்கொண்டிருங்கள். உங்களுக்குள்ளாக அவிசுவாசமான எண்ணங்கள் வந்துவிட இடம்கொடாதிருங்கள். எந்த சூழ்நிலையிலும் கர்த்தரைப் பற்றிக்கொண்டிருங்கள். இதோ சதா காலங்களிலும் உங்களோடு இருக்கிறேன் என்று வாக்கு பண்ணியிருக்கிறார். அவர் நம்மோடு இருப்பார். அவருடைய நாமத்தில் நாம் கேட்டுக்கொள்வதெதுவோ அதை பிதாவாகிய தேவன் நமக்கு தந்தருளுவார்.

**கள்வர்களில் ஒருவனை கர்த்தர் கைவிட்டதன் காரணம் என்ன?**

ஒன்று அவன் கர்த்தரை விசுவாசிக்கவில்லை, மற்றொன்று தேவனுக்கு பயப்படும் பயம் அவனிடத்தில் இல்லை. இப்படிப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை கர்த்தர் இரட்சிக்கமாட்டார். விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாதகாரியம் என்று வேதத்தில் படிக்கிறோம். அடிப்படை அஸ்திபாரம் விசுவாசம். இது ஒரு மனிதனுக்கு அவசியம் வேண்டும். பிசாசுகள் கூட விசுவாசித்து நடுங்குகின்றன என படிக்கிறோம். அப்படியிருக்கும்போது தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதனுக்கு விசுவாசம் எத்தனை அவசியம்! வேதம் போதிக்கிறது; “வயலிலிருக்கிற இரண்டுபேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான் மற்றவன் கைவிடப்படுவான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்றார் (லூக்.17:36). அப்படியென்றால் இரண்டுபேரில் ஒருவனை கர்த்தர் கைவிட்டுவிடுவார் என்பது



# துவாலையின் பாடம் -3

## Lessons of the Towel *- Jerry Bates*

**இயேசுவின் உயிர்த்தெழுதல்- 1கொரிந்தியர் 15:1-23**

**- மொழியாக்கம் சகோ.தானியேல், சென்னை**

1. கிறிஸ்துவானவரின் சரீர உயிர்த்தெழுதலைப்பற்றி வேதம் தெளிவாக போதிக்கிறது.
இருப்பினும் அநேக மக்கள் அதை நம்பக்கூடாத நிலையில்லாவிட்டாலும் நம்ப சிரமப்படுகின்றனர்.

2. ஒரு மூதாட்டி அலங்காரத்துக்கான செயற்கைப் பழங்களை விற்றுக் கொடிருந்தார். ஒரு நாள் ஒரு வாடிக்கையாளர் அந்த மூதாட்டி விற்கும் பழம் போதிய அளவு உண்மைத் தன்மையுடையதாயில்லை என்று புகார் செய்தார். அவர் ஒரு ஆப்பிளைக் காண்பித்து அது நம்ப முடியாத அளவு சிகப்பாகவும் உருண்டையாகவும் மிகப் பெரியதாகவும் இருக்கிறது என்றார். அந்த சமயத்தில் செயற்கைப் பழம் விற்கும் அந்த மூதாட்டி ஒரு ஆப்பிளை எடுத்து சாப்பிடத் தொடங்கினார். காலங்காலமாக இயேசுவின் உயிர்த்தெழுதல் பரிசோதிக்கப்பட்டு அநேக அதிகாரங்களால் தீர்க்கப்பட்டு எழுத்தாளர்களால் தொகுத்து எழுதப்பட்டதாக இருக்கிறது நிரூபிக்க முடியாத அது சாதாரண நிகழ்வு அதே சமயம் நமக்கு மிகவும் நல்லதொரு நிகழ்வாகும்.

3. இதை நம்புகிறேன் என்று சொல்லும் மற்றவர்களும் அது நடந்ததா இல்லையா என்பதைப் பற்றி கூட கவலையில்லை என்று இந்த விதமான குருட்டு நம்பிக்கை, வாழ்வின் மற்ற விஷயங்களிலும் ஏளனம் செய்யப்படுகின்றன.

4. பல வருடங்களுக்கு முன்பு இயேசுவானவரின் உயிர்த்தெழுதலைப் பற்றி “டைம்ஸ் மற்றும் நியூஸ்வீக் பத்திரிக்கைகளில் முக்கியச் செய்தி ஒன்று வெளியானது.

5. நியூஸ்வீக் என்ற பத்திரிகைக்கு 600-க்கும் அதிகமான கடிதங்கள் இந்த கட்டுரையைப் பற்றி பலவிதமான அபிப்பிராயங்களைச் சொல்லின. அதில் இரண்டு கடிதங்களை கவனியுங்கள். ஒன்று தன்னைத்தானே “போற்றத்தக்கவர் என்று அழைத்துக் கொள்பவர்” உங்கள் செய்தி மிகவும் பிரமாதமாக அந்த உயிர்த்தெழுதலை சொல்லியிருக்கிறது.
வேதாகமம் முரண்பாடுகளும், கற்பனைக் கதைகளும், தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளும், கேள்விக்குரிய சரித்திரமும் கொண்டது. நீங்கள் அதைக் பிரத்தியேகமான நிலையிலிருந்து கேட்க முடியாது ஆனால் இயேசு என்ற ஒரு மனிதருடைய சரீர உயிர்த் தெழுதலைக் குறித்து வேதாகமம் அசைக்க முடியாத திட நம்பிக்கையை வலியுறுத்துகிறது. எல்லாம் சொல்லப்பட்டு முடித்த பின்பும் இந்த நம்பிக்கை எப்போதும் போல விசுவாசத்துக்குரிய ஒன்றாகவே இருக்கிறது. இது சங்கடத்தை உண்டு பண்ணுவதாயிருந்தாலும் அதை விடவும் சபையின் மகிழ்ச்சியாயிருக்கிறது.
வேறொரு கடிதம் அவர் தேவனுடைய குமாரனாக இல்லாதிருந்திருந்தால் நிச்சயமாகவே பூமியில் வாழ்ந்த யாவருக்குள்ளும் அவரே மிகப் பெரிய சமூக சீர்திருத்தவாதி (அதே சமயம் பொய்யரும் வஞ்சகருமாக பூமியிலுள்ளோரிலும் இருந்திருப்பார்). அன்பு, மனதுருக்கம் மற்றும் சமத்துவத்தைப் பற்றிய அருடைய செய்தி தேவனுடைய பார்வையில் மிகுந்த ஆறுதலாகவும், சவாலாகவும் மனித இனத்துக்கு இருந்திருக்கும். முடிவாக அவர் மரித்த பின்பு என்ன நிகழ்ந்ததென்பது பெரிதல்ல. சரித்திரத்தை மாற்றியது அவருடைய மரணமல்ல அவருடைய வாழ்க்கை முறையே என்பது தெரிந்தால் போதுமானது.

6. அநேகருடைய கருத்தில், ஏன் புதிய ஏற்பாடு போதக நிபுணர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்பவர்கள் கருத்தில் கூட இது உண்மையில் நிகழ்ந்ததா இல்லையா என்பது பொருட்டல்ல. இது விசுவாசத்துக்குரியது. அவ்வளவுதான் 1கொரி.15:3-8-ல் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பற்றிய சில சாட்சியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த மனிதர்களுக்கு இந்த சாட்சியங்களெல்லாம் இது உண்மையாயிருக்குமென்று நம்பும் வரை முக்கியமானதல்ல.

## தெரிந்துகொள்வோம்

**துப்பட்டி:** Linen Cloth. மாற்கு 14:51,52



1. **பஞ்சு நூல்** - Flax
2. **துப்பட்டி** - A linen cloth (மாற்கு 14:51)
3. **சணல் நூல் சட்டை** - Linen trousers (லேவி.16:4) (இடைக் கச்சை - A linen sash)
4. **மூடுதிரை** - Linen Thread (யாத்.26:1,31)
5. **சிம்சோனின் விடுகதை** 30 துப்பட்டி - (நியா.14:12)
6. **யோசேப்பு** மெல்லிய துப்பட்டியிலே - (மத்.27:59)

## "தேவன் விரும்பும் ( ஆராதனை) வழிபாடு"

*-John S. Nathan -94444 43378*

**- சென்ற மாத தொடர்**

### வேதத்தை ஆராய்ந்துபாருங்கள்

ஆபேலுக்கு பதிலாக Compensation சேத் (Seth) ஆதாம், ஏவாளின் 3-ம் மகனாக (ஆதி.4:25) பிறந்தவன். ஆதி.4:28; 5:3,8; 1நாளா.1:1; லூக்.3:38 அவளின் பிள்ளைகள் ஆதி.4:26; 5:6,7.

தமிழகத்திலே 2500 கோடி ரூபாயில் முடிவடையப்போகும் சேது சமுத்திரத்தின் தலைமகன் இவரே. லேமூறியா கண்டம் ஆழி பேரழிவால் அழிக்கப்படுவதற்கு முன்பு மத்திய ஆசியாவிலிருந்து சம வெளிகளில் கால் நடையாகவே இலங்கை வழியாக தமிழகம் நடந்திட முடியும். அப்படி வந்த முதல் குடும்பம்தான் ஆதாமின் குடும்பம். அப்பகுதியில் சேத் வாழ்ந்ததினால் அப்பகுதி சேது சமுத்திரம் என்றழைக்கப்பட்டது. இன்றும் திரிகோண மலையில் ஆதாம் நடந்த பாதை காணப்படுகிறது. இலங்கை இந்திய கிறிஸ்தவர்கள் அடிக்கடி அங்கு கூடி தேவனை ஆராதித்திருக்கிறார்கள். அப்பகுதிக்கு Adamspeak என்று இன்றும் அழைக்கப்படுகிறது. மேலும் ஊர் என்பதாகும். அதனால் தான் தமிழகத்தில் ஏன் இந்தியாவில் பல ஊர்களின் பெயர்கள் ஊரில் முடிகிறது. நாலூர், எண்ணூர், கோயம்புத்தூர், தஞ்சாவூர், கஞ்சனூர், நேமூர், சாத்தனூர், மேலூர் என்ற பல ஊர்கள் உள்ளதை எண்ணிப்பார். சேது சமுத்திரத்திற்கு சொந்தக்காரன் நீங்கள் தான் வேறுயாரும் உரிமை கொண்டாடிட முடியாது ஏனெனில் அது நமக்குச் சொந்தம்

**- தொடர்ச்சி அடுத்த இதழில்**



அர்த்தமல்ல. இருவரில் ஒருவன் ஆண்டவரையும் அவருடைய உபதேசங்களையும் ஏற்றுக்கொள்ளக்கூடியவனாக இருப்பான். ஆகையால் கர்த்தர் அவனை இரட்சிப்பார். இருவரும் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாக இருந்தால் இருவரையுமே இரட்சிப்பார். அதில் எந்த விதமான சந்தேகமுமில்லை. செபதேயுவின் குமரார்கள் இருவரையும் தம்முடைய ஊழியத்தில் கர்த்தர் சேர்த்துக்கொள்ளவில்லையா, அவர்கள் இருவரும் ஊழியம் செய்தார்கள். யாரெல்லாம் ஏற்றக்கொள்கிறார்களோ அவர்களை கர்த்தரும் ஏற்றுக்கொள்வார். ஒருவரும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தமல்ல. எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டும் என்றும் நம்மில் நீடியபொறுமையோடிருக்கிறார் என திருமறை நமக்குப்போதிக்கிறது. ஆகையால் அன்பு நேயரே, காலத்தை பயன்படுத்திக்கொள்ளுங்கள். உங்களுடைய நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் கர்த்தருடைய வார்த்தையை எடுத்துச்சொல்லுங்கள். சிலுவையில் தொங்கிய கள்வன் மற்ற கள்வனுக்கு கடிந்துகொண்டு புத்திசொன்னதைப்போல சொல்லுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

### நடப்புச் செய்திகள்

- திண்டுக்கல் அருகே அகரம் கிராமத்தில் ஹைதர் அலி, திப்புசுல்தானுக்கு மணிமண்டபம் கட்ட இடம் தேர்வு.
- உயிர்காக்கும் அத்தியாவசியமான 348 மருந்துகளின் விலை, 20 சதவீதம் வரை குறைக்கப்பட்டுள்ளது. இது நவ.10 முதல் அமலாகும்.
- இந்தியர் சீனிவாசன் அமெரிக்க மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதியாக பதவி ஏற்றார்.

### ஜெபியுங்கள்

- இம்மாத ஊழியங்களுக்காக...
- ஜெபிக்கும்படியாக கேட்டுக்கொண்ட வாசகர்கள் நலமான காரியங்களை கர்த்தரிடத்தில் பெற்றுக்கொள்ள...
- கர்த்தருக்குப் பிரியமான ஊழியத்தை நாங்கள் தொடர்ந்து செய்ய...
- பொய்யர் மத்தியில் நாங்கள் உண்மையாயிருக்க...



### வேத அறிவுப்போட்டி: 157 -ன் விடைகள்

| | |
|---|---|
| 1. மாகோர் மீசாபீப், எரேமியா | - எரே.20:3 |
| 2. பேதுரு, யோவான் | - அப்.4:18 |
| 3. எரேமியா | - புலம் 1:18 |
| 4. கூடாதே | - ரோம.6:1 |
| 5. இஸ்ரவேல் | - எசே.20:30 |
| 6. பவுல் | - 1கொ.5:12 |
| 7. நேபுகாத்நேச்சார் | - தானி.4:2 |
| 8. பவுல் | - 2கொ.2:11 |
| 9. சகாயம்உண்டு | - ஓசி.13:9 |
| 10. ஆபிரகாமின் | - கலா.3:7 |

### வேத அறிவுப்போட்டி: 157-ல் வெற்றி பெற்றவர்கள்

| | |
|---|---|
| 1. Tmt. மரகதம் திரவியம் | - கோம்பை |
| 2. M. சாலொமோன் | - கோடை |
| 3. Sis. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 4. Miss. கிப்ட்ராஜாமணி | - ஒட்டநத்தம் |
| 5. T. இராஜாத்தி | - கோம்பை |
| 6. M. இராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 7. S. லதாசூரிய மூர்த்தி | - தேனி |
| 8. A. ரெபேக்காள் | - மதுரை |
| 9. G. பூங்கோதை | - ஈரோடு |
| 10. T. தமிழ்செல்வி | - கரூர் |
| 11. Ira. எதிராசன் | - சங்கரி |
| 12. S.A. சாமுவேல் | - நாமக்கல் |
| 13. Sis. பொன்னிவிக்டர் | - தாராபுரம் |
| 14. R. ஜோஸ்வாசெல்வகுமார் | - சிவகாசி |
| 15. S.R. பெரியசாமி | - சேலூர் |
| 16. R. ஜோனிபாபயால் ஜோஸ்வா | - சிவகாசி |
| 17. K. மோகன் | - குமாரபாளையம் |
| 18. P. இன்பராஜ் | - திருநெல்வேலி |

## நாம் ஏன் கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்கிறோம்
## ரட்ஹ் ரங் டஹற்ற்ஹறங் ர்ச் பட்ங் கர்ழ்க்ஷள் நன்ல்ல்ங்ழ்

*J.C.Choate*



இயேசுவும் அப்போஸ்தலரும் மேல் வீட்டறையில் பஸ்காவில் பங்குகொள்ளும்படி கூடியிருக்கையில் கர்த்தருடைய பந்தியானது இறுதி விருந்தை நினைவுபடுத்துகிறது. பஸ்கா என்பது ஆட்டுக்குட்டியின் இரத்தம் எந்தெந்த வீட்டின் நிலைக்கால்களில் தெளிக்கப் பட்டிருந்ததோ அதனைக் கண்டு மரணதூதன் கடந்து சென்றதை நினைவுப்படுத்தும்படி கொண்டாடும் ஒரு வருடாந்திரப்பண்டிகையாகும் (யாத்.12). இந்தப்பண்டிகை ஒழிந்துபோனது, ஆனால் புதியஏற்பாட்டின் வருகையினால், கர்த்தருடைய ஜனங்கள் இப்போது கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளுகின்றனர்.

வேதவாக்கியம், "அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புதுஉடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடின பின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப்போனார்கள்" (மத்.26:26-30) என்று கூறுகிறது.

மாற்கு புத்தகத்தில் நாம், "அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதை அவர்களுக்குக்கொடுத்தார். அவர்களெல்லாரும் அதிலே பானம்பண்ணினார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: இது அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. நான் தேவனுடைய ராஜ்யத்தில் நவமான ரசத்தைப் பானம் பண்ணும் நாள்வரைக்கும் திராட்சப்பழரசத்தை இனிநான் பானம் பண்ணுவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவ மலைக்குப் புறப்பட்டுப்போனார்கள்" (மாற்.14:22-26) என்று வாசிக்கிறோம்.

கடைசியாக, லூக்கா இதே விதமாகக் குறிப்பிடுகிறது, "வேளைவந்தபோது, அவரும் அவருடனேகூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு



**சென்னை மூலக்கடை கிறிஸ்துவின் சபை 12 வது ஆண்டு விழா 29 செப்டம்பர் 2013**



செய்தி சகோ.அர்ஜூனன்




சபை ஊழியர் சகோ. ரீகனுடன் இணைந்து கர்த்தருடைய பணியைச் செய்யும் வாலிபர்கள்



12-வது ஆண்டு விழாவில் கலந்துகொண்ட சகோதர சகோதரிகள்



# கோபம் ஒரு தெரிவு

ந்ங்ழ் ஜள் அ இட்ர்ண்ழுங்ஷ் ador B.Cariage

வாழ்க்கை என்பது குழப்பங்கள், சோர்வுகள், ஏமாற்றங்கள் நிறைந்தது. இதுவே நமக்கு மிக எளிதாக எல்லா நேரங்களிலும் கோபமடையச் செய்கிறது. நம்முடைய ஊடகம் சமுதாயம் போன்றவைகள் மிக உதவியாக இருக்கிறதில்லை. எல்லா நேரத்திலும் நீங்கள் செய்தித்தாள்களை வாசிக்கிறீர்கள், டி.வி -யைத் திருப்புகிறீர்கள், அல்லது சினிமா பார்க்கிறீர்கள், அங்கே வன்முறைச் சம்பவங்கள் இல்லாத காட்சியை காண்பிக்கிறது மிகக் கடினம். கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்றவை மிகவும் சாதாரணமாகிக் கொண்டிருக்கிறது. சில வாரங்களுக்கு முன்பு ஒரு ஏழு வயது சிறுவன் (பிலிப்பைன்ஸில்) தன்னுடைய பெற்றோர் இல்லாதபோது தன்னைக் கவனித்துக் கொள்ளும் ஒருவரை டி.வி சேனல்களை மாற்றியதற்காக சுட்டு விட்டதைப்பற்றி வாசித்தோம். அவன் பார்த்துக் கொண்டிருந்த அந்த நிகழ்ச்சி 'ROBOCOP' என்ற நிகழ்ச்சியாகும். அந்தச் சிறுவன் கட்டுக்கடங்கா கோபத்தினை தனக்குள் கொண்டிருந்ததைக் காவலர் கவனித்தார்.

நம்முடைய குழந்தைகள் சிறுவதிலேயே அதிகப்படியான கோபங்கொள்ளுகையில், நம்முடைய சமுதாயம் அதை உற்றுநோக்க வேண்டியது மிக அவசியமான தேவையாயிருக்கிறது. வேதாகமம் இந்தப் பிரச்சனைக்கு ஞானத்தையும் தீர்வையும் அளிக்கிறது.

1. வேதம், "கோபங்கொண்டாலும் உங்கள் கோபத்தில் பாவஞ்செய்யாதீர்கள்" என்கிறது. வேறு வார்த்தையில், அது உங்களை மேற்கொள்ளவிடாதீர் என்பதாகும். உங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் கோபம் உங்களைக் கட்டுப்படுத்த இடமளிக்காதீர்கள்.

2. வேதாகமம், "சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது" இவ்வசனத்தின் அர்த்தமாவது "உங்கள் இருதயத்தில் உள்ள எரிச்சல் தணியக்கடவது" என்பதாகும். உங்கள் எரிச்சல் உங்களை மேற்கொள்ளுவதற்கு முன் உங்கள் எரிச்சலை சீக்கிரமாய் மேற்கொள்ளுங்கள் எனக் கூறுகிறது.

3. வேதாகமம் மன்னிக்கச் சொல்லுகிறது. "நான் உங்களை மன்னித்திருக்கிறதைப் போல மன்னியுங்கள்" என இயேசு கிறிஸ்து கூறுகிறார். உங்கள் எரிச்சல் உங்களை விட்டு அகலக்கடவது. விருப்பத்தோடே புண்படுத்துதலைத் தாங்கிக் கொள்ளுங்கள், கிரயம் செலுத்துங்கள் – அதுவே மன்னிப்பாகும்.

நீங்களாகவே சரிபார்த்துக் கொள்ளவும், தேவன் கோபத்தைக் குறித்து என்ன சொல்லியிருக்கிறார் எனக் கற்றுக் கொள்ளவும் வேதாகமத்திலுள்ள பல வசனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. கோபங் கொள்ள அல்லது கோபங்கொள்ளாமலிருக்க நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது சரியானவற்றைத் தெரிந்துகொள்ளவும்!

மாற்கு டுவைன், என்பவர், "மன்னிப்பு என்பது கீழே விழுந்து நசுக்கப்பட்டிருக்கிற பல வண்ணப்பூக்களின் நற்கந்தம் போன்றது" என்றார்.

(வேதவாக்கியங்கள்: எபே.5:25-32; ரோமர்12:9-21; நீதி.14:29,19:11; மத்.6:14; மாற்3:28; 1யோவா.1:9; மாற்.11:25; லூக்.17:4; கொலோ.3:13; யாக்.5:16; 1கொரி.13).

> கோபம் உங்களை பிரச்சனைக்குள்ளாக்கி அங்கே பெருமை உங்களைத் திருப்திப்படுத்துகிறது *-The Voice of Truth International*



முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி; நீங்கள் இதை வாங்கி, உங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்ளுங்கள்; தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சப்பழரசத்தைத் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து; இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து; இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்" (லூக்.22:14-20)

கர்த்தருடைய பந்தி ஏற்படுத்தப்படுவது பற்றிய இந்த மூன்று பதில்களில், நாம் கவனிக்க வேண்டிய அநேகக் காரியங்கள் உள்ளன. முதலாவது, முன்பு குறிப்பிடப்பட்டுள்ளபடி, இயேசு சீஷர்களுக்கு இரவு விருந்திற்கு அறிமுகப்படுத்தும்படி பஸ்காவிருந்தினை ஏற்படுத்துவதற்கு அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு அது கைக்கொள்ளப்படுமென ஒரு இரவு விருந்தை அல்லது ஒரு நினைவு விருந்தை பயன்படுத்தினார். அவர், அப்பம் அவருடைய சரீரமாயிருக்கிறது அல்லது அவருடைய சரீரத்துக்கு மாதிரியாயிருக்கிறது என்றும் அது தம்மையும் தம்முடைய பாடுகளையும் நினைவுகூரும்படிக்கு பங்கெடுக்கப்படவேண்டியது என்றும் சொன்னார். பாத்திரம், அதாவது திராட்சப்பழரசம் தம்முடைய இரத்தமாகவும் அதாவது தம்முடைய இரத்தத்திற்கு மாதிரியாயிருக்கிறதென்றும் மனுஷனுடைய பாவங்களின் மன்னிப்புக்கென்று சிந்தப்பட்ட இரத்தமாயிருக்கிறது என்றும் அந்த இரத்தத்தை நினைவுகூரும்படிக்கு அது பங்குகொள்ளப்பட வேண்டியதாயிருக்கிறது என்றும் சொன்னார். நிச்சயமாக, இந்த வேதவாக்கியங்களில் அவர் பேசுகின்ற இந்த அப்பமானது, இந்த இராப்போஜனத்தில் பங்குகொண்ட போதிலும்கூட, இது கிறிஸ்துவினுடைய நேரடியான சரீரமாயிராது. பாத்திரமானாலும், அதாவது பழரசம் அல்லது திராட்ச ரசமானாலும், கிறிஸ்துவினுடைய நேரடியான இரத்தமாயிராது. ஆனால் அவைகள் வெறுமனே மாதிரியாக அல்லது கிறிஸ்துவின் சரீரம் மற்றும் அவருடைய இரத்தமாக கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்ளுகிறவர்கள் நினைவுகூருகிற ஒன்றாக இருக்கும். இந்த பஸ்காவானது புளிப்பில்லா அப்பமும் திராட்சப் பழரசமும் சேர்ந்தது என குறிப்பிடுகிறதாயிருக்கவேண்டும். கிறிஸ்துவும் அப்போஸ்தலரும் பஸ்காவைப் புசித்தபடியினாலும் அதே சமயம் தம்முடைய இராப்போஜனத்தை ஏற்படுத்த அவர் அப்பத்தையும் பாத்திரத்தையும் பயன்படுத்தியபடியினால், இன்னும்கூட கர்த்தருடைய பந்தியில் நாம் பங்குகொள்ளுகையில், நாம் புளிப்பில்லாத அப்பத்தையும், திராட்சப்பழம் அல்லது திராட்சப்பழ ரசத்தையும் கர்த்தருடைய சரீரத்தையும் கர்த்தருடைய இரத்தத்தையும் நினைவுகூரும்படிக்கு பயன்படுத்துகிறோம். இரண்டாவது, இயேசு அவர்களோடுகூட தேவனுடைய ராஜ்யத்தில் இது நிறைவேறுமளவும் இந்தப் பஸ்காவைப்

புசிப்பதில்லை என்று தம்முடைய சீஷர்களிடம் சொன்னார். இது கிறிஸ்து சீக்கிரமாக காட்டிக்கொடுக்கப்படப்போகிறார் என்றும் இவ்வாறாக உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் இரத்தஞ்சிந்தப் போகிறார் என்றும் வெளிப்படுகிறது. அதன்பின் அவர் அடக்கம் செய்யப்பட்டு மூன்று நாள் இரவுகளுக்கு பிறகு கல்லறையிலிருந்து புறப்பட்டு சீஷர்களுக்கும் மற்றவர்களுக்கும் சில நாட்களுக்குக் காட்சியளித்து அதன்பிற்பாடு பரலோகத்திலிருக்கிற பிதாவினிடத்திற்கு திரும்பிச்சென்றார். தேவனுடைய ராஜ்யம் அல்லது சபை எருசலேமிலே ஸ்தாபிக்கப்பட்டு அங்கிருந்து அது உலகமுழுவதும் பரவும். தயவுகூர்ந்து கவனியுங்கள் ஏற்றவேளையில் சபை ஸ்தாபிக்கப்பட்டபிறகு "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (அப்.2:42) என வாசிக்கிறோம். அப்பம்பிட்குதல் இங்கே கர்த்தருடைய இராப்போஜனத்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் வரப்போகிற ராஜ்யம் அல்லது சபையில் சீஷர்கள் பந்தியில் பங்குகொள்கையில் கிறிஸ்து அவர்களோடு இருப்பாரென வாக்குப்பண்ணினார். நிச்சயமாக, அவர் சரீரத்தில் அவர்களோடுகூட இருக்கப்போவதாக பொருள்படுத்தவில்லை, ஆனால் அவர்களோடுகூட இருந்தார் மேலும் அவர் ஆவியில் தம்முடைய பிள்ளைகளோடுகூட இன்றும் இருக்கிறார். எங்கே இரண்டு அல்லது மூன்று பேர்கள் தம்முடைய நாமத்தில் கூடுகிறார்களோ அங்கே அவர்களோடுகூட தாம் இருப்பேன் என்று அவர் சொன்னார் (மத்.18:20). மீண்டும், அவர் எப்பொழுதும், அதாவது மரணபரியந்தமும்கூட நம்மோடே இருக்கப் போவதாக வாக்குப் பண்ணியிருக்கிறார் (மத்.28:20). ஆனபடியினால், சபை நிலைத்திருக்கிறது, கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் கர்த்தருடைய பந்தியில் பங்குகொண்டு, அதிலே நிலைத்திருக்கையில், அவர் நம்மோடுகூட இருக்கிறார்.

இப்போது என்னோடுகூட 1கொரிந்தியர்11:23-29-க்குத் திரும்பி, அப்போஸ்தலர் பவுலின் வார்த்தைகளை வாசிப்போம், அவர் சொன்னபோது, "நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச்செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப்பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் **கர்த்தருடைய**, அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில்



கர்த்தருடைய மகத்துவங்களை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டு ஒருவரை ஒருவர் ஆவிக்குரிய ஜீவியத்தில் தாங்கி பலப்படுத்துவோம். அநேக நேரங்களில் ஞானஸ்நானம் பெற்று, தேவனுடைய குடும்பத்தில் பிறந்து, தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறவர்கள் கூட சோதனை நேரங்களில் சோர்ந்து போய்விடுகின்றனர். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நம்முடைய சகோதரிகளிடம் கர்த்தருடைய மகத்துவங்களையும் அன்பையும் சொல்லி ஸ்திரப்படுத்துவோம். கர்த்தர் நம்முடைய அன்பு சகோதரிகளுக்குச் செய்யும் நன்மையான காரியங்களுக்காக ஒருமனதோடுகூட கர்த்தரை மகிமைப்படுத்துவோம். சகோதரிகள் ஒருமித்து வாசம் பண்ணும்போது நன்மையும் இன்பமும் சூழ்ந்துகொள்ளும். இருதயங்களை ஆராய்ந்து அறிகிற கர்த்தருக்கு முன்பாக நம் இருதயம் செம்மையாக இருக்கட்டும். கர்த்தர் தம்முடைய நன்மையினாலும் இன்பத்தினாலும் நம்மை திருப்திப்படுத்துவாராக!

# தேவ அன்பு
# The Love of God

*-Betty*

மனிதனுடைய குற்றங்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற தேவநீதியை தவிர மனிதனுடன், தேவன் வைத்திருக்கும், எல்லா உறவு முறையிலும், அவருடைய அன்பை பெற பாத்திரமில்லாதவனுக்கும் தேவன் சந்தோஷத்தையும், வாழ்வையும் இரக்கத்தையும், அளிக்கிறார்.



வேதாகமம் ஒரு நீண்ட காதல் (அன்பு) கதை. தேவனுடைய அன்பு கடிதத்தில், தம் உள்ளத்தை திறந்து நம்மீது கொண்டுள்ள மிகச்சிறந்த பாசத்தை வெளிப்படுத்துகிறார். அவர் அன்பு நமக்கு எவைகளை எல்லாம் செய்ய வைத்தது, அது எப்படிப்பட்ட அன்பு என்பதை இந்த புத்தகத்தின் பக்கங்களை வாசிக்கும் போது அவரிடத்திலிருந்து கற்றுக்கொள்கிறோம். கிறிஸ்தவனுடைய இருதயத்தில் இருக்கும் அன்பிற்கும், மற்ற தேவர்கள் என்று சொல்லப்படுபவர்களை பின்பற்றுவோர் இருதயத்தில் இருக்கும் அன்புக்கும் உள்ள வித்தியாசமே இதுதான். கிறிஸ்துவின் அன்பு செயல்படுகின்ற அன்பு. தன்னைக் காட்டிலும் மேலாக மற்றவனிடத்தில் அக்கரை காட்ட வேண்டும் என்பதை வலியுறுத்தும் அன்பு.

சிந்தையாயிருக்கிற யாவரும் நம் சகோதரிகளிடத்தில் உண்மையான அன்புகூரக்கடவோம். நம் இனம், ஜனம் என்று சொல்லி சுயநலமாய் வாழாமல் கிறிஸ்து, யார் எனக்கு சகோதரர்கள், யார் எனக்குத் தாயார், "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார்" (மத்.12:50) இந்த சிந்தை நமக்குள்ளும் இருக்கட்டும்.

பாருங்கள், எலிசபெத்து, மரியாளின் வாழ்த்துதலைக் கேட்டபொழுது, அவளுடைய வயிற்றிலிருந்த பிள்ளை துள்ளிற்று; எலிசபெத்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, உரத்தசத்தமாய்; ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது. என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது. இதோ, நீ வாழ்த்தின சத்தம் என் காதில் விழுந்தவுடனே, என் வயிற்றிலுள்ள பிள்ளை களிப்பாய்த் துள்ளிற்று. விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்றாள்" (லூக்.1:41-45). ஒருவருக்கொருவர் எப்படி வாழ்த்திக்கொள்ளுகிறார்கள்! முதிர்வயதாகிய எலிசபெத்து இளையவளாகிய மரியாளை என் ஆண்டவருடைய தாயார் என்றும், பாக்கியவதி என்றும் சொல்லி வாழ்த்துகிறாள். மூத்தவளாகிய தனக்கு இந்த பாக்கியம் கிடைக்கவில்லையே, நாமும் தானே கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தோம் (வச.6) என்று பொறாமைப்படவில்லை. 'அன்புக்குப் பொறாமையில்லை' என்ற வசனத்திற்கேற்ப இருவரும் மாறி மாறி வாழ்த்துவதோடுகூட தேவனையும் மகிமைப்படுத்துகிறார்கள். அது மாத்திரமல்ல, "மரியாள் ஏறக்குறைய மூன்று மாதம் அவளுடனே இருந்து, தன் வீட்டுக்குத் திரும்பிப்போனாள்" (வச.56) என்று வாசிக்கிறோம். அப்படியானால் கர்ப்பந்தரித்திருக்கிற எலிசபெத்துக்கு மூன்றுமாதம் உதவியாக இருந்திருக்கிறாள் அப்படி உதவியாகயிருந்த நாட்களில் தேவனைக் குறித்தும், அவருடைய மகத்துவங்களைக் குறித்தும் பேசி, தேவனை மகிமைப்படுத்தியிருக்கிறாள். "என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது.... வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்; அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது..... தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ்செய்தார்;" (வச.46-54) என்றெல்லாம் சொல்லி தேவனைத் துதித்து மகிமைப்படுத்துகிறாள்.

அன்பு சகோதரிகளே, நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளிருக்கிற உங்கள் சகோதரிகள் யாரையாவது கண்டாள் இவ்வாறு கர்த்தருக்கடுத்த காரியங்களைப் பற்றி பேசுகிறீர்களா? அல்லது உலகக் காரியங்களையும், வீணான பேச்சுகளையும் பேசி ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறீர்களா? காலஞ்செல்லாததா யிருக்கிறபடியால் காலத்தைப்பயன்படுத்திக் கொள்வோம், கர்த்தர் நமக்குச் செய்த நன்மைகளுக்காகவும், நம்முடைய சகோதரிகளுக்குச் செய்த நன்மைகளுக்காகவும் ஒருமித்தவர்களாயிருந்து கர்த்தரை மகிமைப்படுத்துவோம்.



பானம்பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், **கர்த்தருடைய** சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால் தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்" என்றார்.

தொடர்ந்து பார்க்கையில், நாம் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டிய சில காரியங்கள் உள்ளன. முதலாவது, பவுல் கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பற்றிய தகவலை கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக் கொண்டிருப்பதாக வெளிப்படுத்தியிருக்கிறான். இரண்டாவது அவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தை நினைவுகூரும்படிக்கு அப்பத்திலும், புதிய உடன்படிக்கையை அல்லது கிறிஸ்துவின் சட்டத்தை உறுதிப்படுத்தும்படிக்கு சிந்தப்பட்ட இரத்தமாகிய கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவுகூரும்படிக்குப் பாத்திரத்திலும் பங்கெடுக்க வேண்டியவர்கள் என அவர் சொன்னார். மூன்றாவது அவர்கள் பந்தியில் தொடர்ந்து பங்கெடுக்க வேண்டியவர்களாக அதாவது கிறிஸ்து வரும்வரை அவரது மரணத்தை நினைவுகூரும் வண்ணமாக இருக்கவேண்டுமெனவும் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் எவ்வாறு தொடர்ந்து பங்கெடுப்பது? அப்போஸ்தலர் 20:7-ல் அப்பம் பிட்கும்படி துரோவாவில் காத்திருந்த கிறிஸ்தவர்களோடு பவுல் கூடி வந்ததை நாம் உதாரணமாக பெற்றிருக்கிறோம். எத்தனை முறை வாரத்தின் முதல் நாள் வருகிறது? ஒருவாரத்திற்கு ஒரு முறை அதாவது கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்குபெற வாரத்தின் முதல் நாளிலே கூடிவரவேண்டியவர்களா யிருந்தார்கள். அவ்வாறே இன்றும் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்களென்பது உண்மை. நாம் வியாழக்கிழமையில், மாதம் ஒரு முறை, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, இன்னும் இதுபோன்ற வேறு நாட்களில் கூடிவரும்படியான உரிமை பெற்றிருக்கவில்லை. மாறாக, முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளும்படி வாரத்தின் முதல் நாள் கூடிவந்தார்களென அறிவுறுத்தப்படுகிறோம். மேலும் ஒவ்வொருவாரத்திலும் ஒரே ஒரு முதல் நாளே இருந்தபடியால் கிறிஸ்துவை நினைவுகூரும் நோக்கத்திற்காக கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளும்படி அவர்கள் அந்நாளிலே தான் கூடிவந்தார்கள். நாம் அவர்களுடைய மாதிரியைப் பின்பற்றுகிறவர்களாயிருந்தால் இன்னும் அதே காரியம் பின்பற்றப்படவேண்டும்.

தொடர்ச்சியாக நான்காவது, கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்கையில் நாம் இரட்சிக்கப்படும்படிக்கும் நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கையைக் கொண்டிருக்கும் படிக்கும் கிறிஸ்து ஏற்படுத்திய தியாகத்தை நினைவுகூர சிலுவைக்கு நேராக திரும்புகிறோம். நாம் அப்பத்தைப் பிட்கையில் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டுள்ளோமென அறிவித்துக் கொண்டும், அதனால் நாம் அவர் எப்போது மீண்டும் வருவார் என்பதையும் அறிவுறுத்திக் கொண்டுமிருக்கிறோம்

ஐந்தாவதாக: நாம் இந்தப் பந்தியில் அபாத்திரமாய் பங்கெடுத்தால் நாம் கர்த்தரிடத்தில் விசுவாசம் கொண்டிருக்கவில்லையென்றும் நாம் என்ன செய்கிறோம் என்பதில் உண்மையுள்ளவர்களாயிருக்கவில்லையென்றும் கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் தகாதவிதமாக பயன்படுத்திய

குற்றமுள்ளவர்களாகவும் இருக்கிறோம் என்பதை நாம் கண்டிப்பாக நினைவுகூரவேண்டும். இதை இன்னொரு விதத்தில் சொன்னால், கர்த்தருடைய பந்தியில் அபாத்திரமாக பங்குகொள்வது நமக்கு நாமே ஆக்கினைத் தீர்ப்புவரும்படி புசிக்கிறோம் குடிக்கிறோம் என்று அர்த்தமாகிறது. ஆனால் கர்த்தருடைய பந்தி நமக்கோ கர்த்தருக்கோ ஏதாவது பொருள்படுத்துமானால் அது நாம் கர்த்தரிடத்தில் கண்டிப்பாக விசுவாசமுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்றே பொருள்படுத்துகிறது.

மேலும் கடைசியாக, ஆறாவது கட்டத்தில், நாம் தேவனுக்கு முன்பாக நம் இருதயமும் ஜீவியமும் நீதியுள்ளதாக இருக்கிறது என்ற நிச்சயமுள்ளவராக இருக்க கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்வதற்கு முன் நம்மை நாமே நிதானித்து பார்க்க உற்சாகப்படுத்தப்படுகிறோம். நாம் கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருக்கிறோம் என நம்மால் முடிந்த அளவு சிறப்பானதைச் செய்கிறோம் என்று அறியும் போது மட்டும் நாம் அதில் பங்குகொள்ள வேண்டும். நாம் அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறோமென கர்த்தர் நம்மில் எதிர்பார்க்கிறவற்றைச் சார்ந்து நம்முடைய இருதயத்தில் நேர்மையுடன் அறிக்கைசெய்ய முடியாவிட்டால், பிறகு கர்த்தருடைய ஜனங்களோடு வாரந்தோறும் அப்பம் பிட்கத் தொடரும்முன் நாம் நம்முடைய பாவங்களுக்காக மனந்திரும்பி நம்மைக் கர்த்தர் மன்னிக்கும்படி கேட்க வேண்டும்.

என்னுடைய நண்பரே; கர்த்தருடைய பந்தியானது கர்த்தருடைய சபையில் அங்கமாயிருக்கிற ஒரு கிறிஸ்தவனுக்கு மிகவும் முக்கியமானது. இது கிறிஸ்துவை நினைவு கூர்ந்து அவருக்கு உண்மையுள்ளவராய் நிலைத்திருக்க வேண்டும் எனப் பொருள்படுகிறது. இது ஒரு போஜனத்தைப்போல புசிப்பதற்கு அல்லது இதன் நோக்கத்தினை புரிந்துகொள்ளாமல் பங்குகொள்வதற்கு இது வெளித்தோற்றத்திற்கல்ல. இது கிறிஸ்தவனை பெலப்படுத்துவதற்கும் அதே சமயம் கர்த்தருடைய பந்தியின் மூலம் கிறிஸ்துவினிடத்திற்கு மற்றவர்களைத் திருப்புவதற்கு அவனுக்கு ஒரு வாய்ப்பளிப்பதற்கும் இது கடைபிடிக்கப்படுகிறது.

நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? கர்த்தருடைய பந்தி உங்களுக்கு என்னத்தைத் தெரியப்படுத்துகிறது? வாரத்தின் ஒவ்வொருநாளும் கர்த்தருடைய பிள்ளைகளோடு அப்பம் பிட்கிறீர்களா? நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிராவிட்டால், நீங்கள் கிறிஸ்தவராய்மாறும்படிக்கு உங்களை ஊக்கப்படுத்த விரும்புகிறோம். கிறிஸ்துவை விசுவாசித்து உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவிலுள்ள உங்களுடைய நம்பிக்கையை அறிக்கையிடுவதின் மூலமும் உங்களுடைய பாவங்களின் மன்னிப்புகென்று தண்ணீரில் அடக்கம்பண்ணப்பட்டு ஞானஸ்நானம் எடுத்துக்கொள்வதின் மூலமும் (மாற்16:16; அப்.2:38) நீங்கள் கிறிஸ்தவராய் மாறமுடியும். நீங்கள் இதைச் செய்யும்போது கர்த்தர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார். ஒரு கிறிஸ்தவனாக, கர்த்தருடைய குடும்பத்தின் ஒரு அங்கத்தினனாக, நீங்கள் வாரத்தின் முதல் நாள் தோறும் கர்த்தருடைய பந்தியைப் புசிக்கலாம், நீங்கள் கிறிஸ்தவ ஜீவியம் செய்வதால், இவ்வாறாக கிறிஸ்துவிலுள்ள உங்களுடைய விசுவாசத்தை அறிக்கையிட்டு, கிறிஸ்துவிலுள்ள உங்களுடைய நம்பிக்கையை உலகத்திற்கு பிரஸ்தாபப்படுத்துங்கள்.



பெண்கள் பகுதி

# எத்தனை நன்மை! எத்தனை இன்பம்!!
# ஏர்ஜ் எர்ர்க்! ஏர்ஜ் டப்ங்ஹள்ஹய்ற்!!

*-J.Glory Arjunan*



**எ**த்தனை நன்மை, எத்தனை இன்பம் சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணும் போது என்று சங்கீதக்காரனாகிய தாவீது 133-ம் சங்கீதம் 1-ம் வசனத்தில் மிக அழகாய் பாடியுள்ளார். அன்பு சகோதரிகளே, இந்த நன்மையும் இந்த இன்பமும் எப்போது வரும்? ஒருமித்து வாசம்பண்ணும் போது. ஏக சிந்தையுள்ளவர்கள் அதாவது ஒரே காரியத்தைக் குறித்த விருப்பமுள்ளவர்கள் தான் ஒருமித்து இருக்கமுடியும். இவ்விதமான ஒருமித்த சிந்தனை ஆவிக்குரிய அல்லது தேவனுக்கடுத்த சிந்தனையாயிருக்கும் போது நிச்சயமாகவே நன்மையும் இன்பமும் நம்மை சூழ்ந்து கொள்ளும். இத்தகைய சிந்தைகொண்டிருந்த இரு சகோதரிகளைக் குறித்து லூக்.1:36-56 வரை வாசிக்கலாம்.

மரியாளும் எலிசபெத்தும் ஒரே இனத்தைச்சேர்ந்தவர்கள். ஆனால் இவர்கள் தங்கள் இனம் ஜனத்தைக் குறித்த சம்பாஷனையில் ஈடுபடவில்லை. இனத்தைக் குறித்த பெருமைகளையோ அல்லது வேறு எந்த உலகப்பிரகாரமான காரியத்தை பற்றியோ சம்பாஷிக்கவில்லை மாறாக இருவரும் தேவபக்தியுள்ள வர்களாய் தேவனையே புகழ்ந்து பேசிக் கொண்டிருந்ததை இவ்வசனங்களில் வாசிக்கிறோம். தேவதூதனால் அறிவிக்கப்பட்டபடி தன் இனத்தாளாகிய எலிசபெத்து தன் முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள் எனக் கேள்விப்பட்டு யூதாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குத் தீவிரமாய்ப் போய், சகரியாவின் (எலிசபெத்தின் கணவன்) வீட்டிற்குள் பிரவேசித்து, எலிசபெத்தை வாழ்த்தினாள் என வாசிக்கிறோம். எப்பேர்பட்ட அன்பு! முதிர்வயதாகி மலடியாயிருந்த எலிசபெத்தைக் கர்த்தர் கடாட்சித்துள்ளார் என்று கேள்விபட்டு தீவிரமாய் போய் அவளை வாழ்த்தி யிருக்கிறாள். அன்பு சகோதரியே, சற்றே இக்காலத்து சகோதரிகளைக் குறித்து சிந்தித்துப்பார்ப்போம். இன்றைய நாட்களில் கிறிஸ்துவுக்குள்ளிருக்கிறேன் எனச் சொல்லிக் கொள்ளுகிற சகோதரிகள் கூட கர்த்தர் மற்றவர்களுக்கு அருளிச் செய்யும் ஆசீர்வாதங்களைக் குறித்து பொறாமைப்படுகின்றனர். பொறுக்க அவர்களுக்கு மனதில்லாது போகிறது. பவுலுங்கூட 'என் இனத்தானாகிய ஏரோதியோனை வாழ்த்துங்கள்' என்று ரோமர்16:11-ல் எழுதுகிறார். ஆனால் அநேகர் இனத்தாரையும் வாழ்த்துவதில்லை கிறிஸ்துவுக்குள்ளிருக்கிற சகோதரிகளையும் வாழ்த்துவதில்லை. அநேகர் மற்றவர்கள் வாழ பொறுக்காதவர்களாகவே இருக்கின்றனர். ஆனால் கர்த்தர், ''எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருக்கிறாரோ அவன் மேல் இரக்கமாயிருக்கிறேன்'' என்கிறார் (ரோமர்9:18) அப்படியிருக்க கிறிஸ்துவுக்குள் ஏக